NUS National University of Singapore

**Headline:** 'Pajamas' Helps To Keep Close With Loved Ones Overseas
**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 14 October 2009

# தொலைவில் உள்ளவர்களுக்கு அன்பைத் தெரிவிக்க உதவும் 'பைஜாமா'



கியோ - சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக கியூட் நிலையத்தை அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்த அதிபர் எஸ் ஆர் நாதன் (இடக்கோடி) அதன் கண்டுபிடிப்புகள் பற்றி விளக்கம் பெறுகிறார்.

படம்: சாவ்பாவ்

வெளிநாட்டில் படிக்கும் பிள்ளைகளுக்கு இனி பெற்றோர்கள் எளிய முறையில் தங்களது அன்பைத் தெரிவிக்க முடியும்.

'ஹகி பைஜாமா' எனப்படும் சிறப்பான இரவு உடையின் பைகளில் காற்று நிரப்பப்பட்டிருக்கும்.

ஒரு தொலை இயக்கக்கருவியின் பொத்தானை அழுத்துவதன் வழி, அதை அணிந்துள்ளவரை கட்டிப்பிடிப்பது போன்று செய்ய முடியும்.

இணைய இணைப்புள்ள அத்தொலை இயக்கக்கருவி, உலகத்தின் எந்த இடத்திலிருந்தும் செயல்படும்.

தொலைவில் உள்ளவர்களை இணைக்கும் பாலமாகச் செயல்படும் இக்கண்டுபிடிப்பு, கியோ - சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக கியூட் நிலைய ஆராய்ச்சியாளர்களின் கண்டு பிடிப்புகளுள் ஒன்றாகும்.

அதோடு, தொலை இயக்கக்கருவி மூலம் கோழிகளுடன் உரையாடுதல், தாத்தா பாட்டிகளுடன் எளிமையாக கணினி விளையாட்டுகள் விளையாடுதல் போன்றவற்றையும் அந்நிலையம் கண்டுபிடித்துள்ளது.

ஜப்பானின் கியோ பல்கலைக்கழகமும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகமும் இணைந்து $20 மி. செலவில் அமைத்துள்ள இந்நிலையத்தை அதிபர் எஸ். ஆர். நாதன் திங்கட்கிழமை அன்று அதிகாரப்பூர்வமாக திறந்து வைத்தார்.

இந்நிலையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சிக் கூடங்கள், இரு நாடுகளிலும் உள்ளன.

இந்நிலையத்தில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்கள், இரு இடங்களிலும் ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ளலாம்.